**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR**

**MCOP.No. 60/2022**

**Deposition of: P.W.2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சக்திவேல் | **Father Name :** | |
| **Village** | : | **Taluk** | : |
| **Caste** | : | **Religion** | : |
| **Calling** | : | **Age** | : |

**Solemnly affirmed by in accordance with the provision of the Indian Oath Act 44 of 1969, on Date: 12.10.2023 at 12.20 p.m to 12.25 p.m.**

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கின் 3-ம் தரப்பினர் ஆவேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன்.

குறுக்கு விசாரணை

1 ) விபத்து நடந்த இடம் கடைவீதி என்றால் சரிதான். எனவே வாகனங்கள் மெதுவாக தான் வரும் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் மேற்படி பேருந்தில் பயனித்தேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. விபத்தில் அடிப்பட்டவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். மேற்படி பேருந்தின் பயனிகளை இறக்கிவிட்டு விட்டு செல்லும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ஆனால் பேருந்தை சட்டென ஓட்டுநர் எடுத்துவிட்டதால் விபத்து ஏற்பட்டது. பேருந்து நிறுத்ததிற்கும் விபத்து நடந்த இடத்திற்கும் சுமார் 150 அடி தூரம் இருக்கும்.

2) நான் சொல்வது போன்று உடனே ஓட்டுநர் வாகனத்தை எடுத்திருந்தால் விபத்து பேருந்து நிறுத்தத்திற்கு அருகிலேயே நடந்திருக்கும் என்றும் ஓடும் வண்டியில் இருந்து இறங்கியதால் தான் 150 அடி தூரம் தள்ளி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரிலேயே பார்க்கவில்லை என்றும் மேற்படி விபத்தில் பாதிக்கப்பட்டவர் என்னுடைய ஊர்க்காரர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. மேற்படி விபத்துஇறந்து போன அருளின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றும் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரால் நிகழவில்லை என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Accidents Claim Tribunal**
**Attur.**